بسم الله الرحمن الرحيم

# Friday Sermon/ வெள்ளிக்கிழமை குத்து.ஃபா

*09 February 2018*
*(22 Jamad'ul Awwal 1439 AH)*

## MERCY / இரக்கம், கருணை



## HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)

உலகனைத்துமுள்ள முஸ்லீம் மக்களுக்கும், எல்லா தோழர்களுக்கும் சலாம் கூறிய பிறகு தஷ்ஹ்ஹுதும், தஅவசும், சூரா அல் பாத்திகாவும் ஓதிக் கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃபத்துல்லாஹ் முனீர் அஹமது அஸீம் (அலை)** அவர்கள் தம் ஜுமா பேருரையை ஆரம்பித்தார்.

இஸ்லாமில், இரக்கம் என்பது எல்லாம் வல்ல அல்லாஹ்வின் மீதான அச்சத்தை குறிக்கின்றது. எல்லாம் வல்ல அல்லாஹ்வின் மீதான இந்த அச்சத்தால் நம்பிக்கையின் உயரமான நிலையை அடைந்து விடுவதற்கும், தண்டனைகளிலிருந்து அகன்று நிற்பதற்கும் மற்றும் சாத்தானின் தீய தூண்டல்களை(செல்வாக்கை) முறியடித்து கொள்வதற்கும் முடிகின்றது. திருக் குர்-ஆன் மற்றும் பல்வேறு நபிமொழிகள்ப்படியும் பார்த்தால், இவ்வுலக வாழ்க்கையின் அஸ்திவாரம் நிலைநிற்பது, மகிழ்ச்சிதரும் கொள்கையின் அடிப்படையிலாகும் என்பது மிக தெளிவாகயிருக்கின்றது. படைப்பினங்கள் ஒருவருக்கொருவர் இரக்கத்துடன் இருக்குமாறு அது மிக முக்கியத்துவத்துடன் நம்மை ஊக்குவிக்கின்றது.

உண்மையில், இரக்கம் என்பது எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளுக்கு ஆளாகியவர்களுக்கு அவன் வழங்கியிருக்கும் மிக சிறந்த ஒரு குணாம்சமாகும். அதைப்போன்றே அல்லாஹ், துரதிர்ஷ்டசாலிகளிடமிருந்து அக்குணத்தை நீக்கியிருக்கின்றான். ஒவ்வொரு உயிரினத்தின் இதயத்திலும் இரக்கம் அமைந்துள்ளது. ஆனால் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் திருப்திக்காக இரக்கம் எனும் இத்தன்மையை எவ்வாறு விநியோகிக்க வேண்டும் என்பதைப் பற்றி தீர்மானிக்க வேண்டியது ஒவ்வொரு உயிரினங்களுமாகும்.

அண்ணல் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறியதாக அபுகுறைரா (ரலி) அவர்களின் ஒரு ரிப்போர்ட், சஹீஹில் புகாரியில் இடம்பெற்றுள்ளது. **“உண்மையில் அல்லாஹ்விற்கு 100 கருணைகள் (இரக்கம்) உள்ளன. அதிலிருந்து ஒரு கருணை மட்டுமே அவனது அனைத்து படைப்பினங்களிடமிருந்தும் ஒன்றுக்கொன்று வெளிப்பட்டுக்கொள்வது. அவனது கருணையின் (இரக்கத்தின்) 99%மும் அவன் மறுமை நாளுக்காக மாற்றிவைத்திருக்கின்றான்” அல்ஹம்துலில்லாஹ்**

இரக்கம் (கருணை) என்பது எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அழகான குணங்களில் ஒன்றாகும். நம்மை பொறுத்தவரையில், அதாவது எல்லாம் வல்ல அல்லாஹ்வின் படைப்பினங்களைப் பொறுத்தவரையில் இரக்கம் என்பது பரிபூரணமான ஒரு குணமாகும். இரக்ககத்துடன், உயிரினங்கள் ஒருவருக்கொருவர் மென்மையாகயிருக்கின்றனர். வலிமைவாய்ந்தவர்,

வலிமையற்றவரிடம் இரக்கம் காட்டுகின்றார். பணக்காரன் ஏழைகளுக்கு, அடைக்கலமற்றவர்களுக்கு, தேவையுடையவர்களுக்கு உதவி செய்ய தயங்க மாட்டார். இதுவேயாகும் இரக்கம். நம்மை பொறுத்தவரையில் இரக்கம் என்பது, குடும்பத்திலும், சமூகத்திலும் தவிர்த்துக் கொள்ளமுடியாத ஒரு கடமையாகும். இது எல்லாம் வல்ல அல்லாஹ் விரும்பும் ஒன்றாகயிருக்கின்றது. அனுதின வாழ்க்கையில் இரக்கம் காட்டுபோர்கள் மீது அல்லாஹ் அவனது அருள் கொடைகளைப் பொழகின்றான்.

இரக்கம் என்பது எல்லாம் வல்ல அல்லாஹ்வின் ஒரு அன்பளிப்பாகும். இது ஒவ்வொரு மனிதனின் உடலிலும் உள்ளன. ஆனால் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் இந்த அன்பளிப்பை சிலர் பலனற்றது என எண்ணி, அதை விட்டு விடுகின்றனர். அதன் ஆன்மீக மதிப்பை அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. குறிப்பாக மனிதன் சாத்தானின் தூண்டல்களில் எளிதில் அகப்பட்டு விடுகின்றான். பின்னர், பாவங்கள் செய்கின்றான். ஆனால் தன்னிடமிருக்கும் இரக்கம் எனும் இந்த ஆன்மீகத் தன்மையை, தன் கரங்கள் வழியாக வினியோகிக்க அனுமதிக்காமலிருப்பது, மற்றனைத்தையும் விட மிக அபாயமான காரியமாகும். அது மூலம் அவரிடமிருக்கும் இந்த அருள்களை அவர் இழந்து விடுகின்றார்.

மானிட சமுதாய மத்தியில், நம்பிக்கையாளர்களை பொறுத்தவரையில் கருணை என்பது புனிதமும் மற்றும் விலை வாய்ந்ததுமான ஒரு மூலகம் ஆகும். அது இறைவனின் அன்பளிப்பாகும். இஸ்லாம், முஸ்லீம்களிடம் கருணையுடன் இருக்குமாறு கட்டளைவிடுக்கின்றது. காரணம் இஸ்லாம் என்பது கருணையுடையவும், இரக்கத்துடையவும் மதமாகும். நன்மை, நீதி, இரக்கம், அமைதி, உண்மை, சாந்தி என்று மட்டுமல்ல, எல்லாம் வல்ல ஏக இறைவனை வணங்குவதற்கும் இஸ்லாம் நம்மை கற்பிக்கின்றது. இதற்கு ஒரு எல்லையே இல்லை. கருணை என்பது தீங்குகளை, இழிவானதை, நல்லதல்லாதவைகளை நீக்கிக்கொள்வதற்கான வாய்ப்பை அளிக்கின்றது. எல்லாம் வல்ல இறைவன் தன் தூதரிடம் கூறிக்கொண்டான்.

**“நாம் உம்மை அகிலத்தாருக்கும் ஓர் அருட்கொடையாகவேயன்றி அனுப்பவில்லை” (21:108)**

அம்றுப்னு அப்துல்லாஹ் அவர்கள் தெரிவிக்கின்றார்கள். அண்ணல் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**“இரக்கம் காட்டுபோர்களிடம், இரக்கமுடையவனாகிய அல்லாஹ் அவனது இரக்கத்தை பொழிகின்றான். ஆகவே பூமியிலிருக்கும் மக்களுடன் நீங்கள் இரக்கம் காட்டுங்கள்! அந்நேரம் சொர்க்கத்திலிருப்பவன் உங்களிடம் இரக்கம் காட்டுவான்”** (திர்மிதி)

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஜரீறுப்னு அப்துல்லாஹ்(ரலி) அவர்கள் தெரிவிக்கின்றார். இது புகாரி முஸ்லீம் ஆகிய நூல்களில் இடம் பெற்றிருக்கின்றது.

**“மக்களிடம் இரக்கம் காட்டாதவர்களிடம் இறைவன் இரக்கம் காட்டுவதில்லை. மட்டுமின்றி பிறரை மன்னிக்காமலிருப்போர்களை எல்லாம் வல்ல இறைவனும் ஒரு போதும் மன்னிப்பதில்லை”.** நம்பிக்கையாளர்களின் உதாரணம் என்பது அவர்களின் நட்பு, அவர்களின் நேர்மை, அவர்களின் வாய்மை, அவர்களின் அனுதாபம் போன்றவை ஒரு உடம்பை போன்றதாகின்றது. இந்த உடம்பில் ஏதேனும் ஒரு உறுப்பிற்கு வேதனை ஏற்பட்டுவிட்டால், அது மூலம் அனைத்து உறுப்புகளும் வேதனை அடைகின்றது. மிக சிறியவர்கள் கூட அதாவது குழந்தைகள் கூட தங்கள் முதியவர்களிடமிருந்து இரக்கத்தை தேவைப்படுகின்றது. அதைப்போன்றே முதியவர்களிடம், வலுவற்றவர்களிடம், நோயாளிகளிடம் இருமடங்கு இரக்கத்தைக் காட்ட வேண்டும். அல்லது மூன்று மடங்கு காட்டவேண்டும். அதுவும் அல்லது எல்கையற்ற நிலையில் இரக்கத்தை காட்ட வேண்டும்.

**முதியவர்களை மதிக்காதவர் நம்மைச் சார்ந்தவரல்ல. குழந்தைகளிடம் இரக்கம்காட்டாதவர் நம்மை சார்ந்தவரல்ல. அனுதின வாழ்க்கையில் நன்மைகள் புரியாதவர்கள் நம்மை சார்ந்தவர்களல்ல. தீமையை தடுக்காதவர், கொடுமை செய்பவர், கெடுதல் இழைப்பவர், கர்வமுடனிருப்பவர், ஊழல் செய்பவர் மற்றும் சமூகத்தின் பிற தீமைகளிலிருந்து விலகி நிற்காதவர் நம்மை சார்ந்தவரல்ல.** முஹம்மது (ஸல்) அவர்கள் கூறியதாக திர்மிதியில் இடம் பெற்றிருக்கின்றது.

நம்பிக்கையாளர்களின் அன்னை ஹஸ்ரத் ஆயிஷா(ரலி) அவாகள் தெரிவிக்கின்றார்கள். அதாவது இறைதூதர்(ஸல்) அவர்கள், தம் மனைவியிடம் பகிர்ந்து கொண்ட ஒரு காரியத்தைக் குறித்து அவர் கூறுகின்றார்.

ஒரு நாடோடி அல்லாஹ்வின் தூதரை பார்க்க வந்தார். பின்னர் அவர் கூறினார். **“நீங்கள் குழந்தைகளை கட்டி தழுவி கொள்கின்றீர்கள். அதை நாங்கள் மிகவும் அரிதாகவே செய்கின்றோம் அல்லது நாங்கள் அது செய்வதேயில்லை”.** அண்ணல் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் பதிலளித்தார். **எல்லாம் வல்ல அல்லாஹ் உங்களின் இதயத்திலிருந்து இரக்கத்தை நீக்கிக்கொண்டான் என்றால், எனக்கு உங்களுக்காக என்ன செய்ய முடியும்.**

## ANIMAL LANGUAGE

### விலங்கின் மொழி

விலங்குகள் கூட, இயற்கை கூட, எல்லாம் வல்ல அல்லாஹ்விடமிருந்து கருணையைப் பெற்றுள்ளது. ஏன் அப்படி? இஸ்லாம் கருணையின் மதமாகின்றது. நீதியின் மதமாகின்றது. சமாதானத்தின் மதமாகின்றது. நீங்கள் கருணையுடன் வாழ்ந்து கொள்ளுமாறு, இஸ்லாம் குறிப்பாக முஸ்லீம்களுக்கு கட்டளை விடுகின்றது.

அப்துல்லாஹ் இப்னுஜாபர்(ரலி) அவர்கள் விவரிக்கின்றார். **அன்சாரைச்சார்ந்த ஒருவரின் வேலிகட்டிய தோட்டத்திற்குள் தூதர்(ஸல்) அவர்கள் நுழைந்தார். ஒரு ஒட்டகம் அங்கு இருந்தது. தூதர்(ஸல்) அவர்களை பார்த்த அந்த விலங்கு திடீரென கண்ணீர் பொழிந்தவாறு, வேதனையுடன் அழத்துவங்கியது. தூதர்(ஸல்) அவர்கள் உடனடியாக அவ்விலங்கின் அருகில் சென்று, அதன் கண்ணீரை துடைத்தார். அவ்விலங்கின் முதுகில் மென்மையாக தடவிக்கொண்டார். அந்நேரம் ஒட்டகம் அழுகையை நிறுத்தியதுடன் மகிழ்ச்சியின் அடையாளங்களை வெளிப்படுத்தத் துவங்கியது. பின்னர் அவ்விலங்கின் உரிமையாளர் யார் என தூதர் விசாரித்தார். அன்சாரிகளை சார்ந்த ஒருவர் “நான்” என கூறியவாறு முன் வந்தார். அவரிடம் தூதர்(ஸல்) அவர்கள் கூறினார் “இந்த விலங்கின் காரியத்தில் நீங்கள் அல்லாஹ்வை**

**அஞ்சவில்லையா? இந்த விலங்கிற்கு உங்களிடமிருந்துள்ள நட்பும், இரக்கமும் கிடைப்பதில்லை. அதைக் குறித்து அவ்விலங்கு அழுதவாறு என்னிடம் புகார் அளித்திருக்கின்றது.**(அஹ்மது)

அவனது தூதராகிய சுலைமான் நபி (அலை) அவர்களுக்கு பறைவைகளின் மொழியைக் கற்பித்தது போன்று, ஒட்டகத்தின் மொழியைப் புரிந்து கொள்வதற்கான ஆற்றலை எல்லாம் வல்ல இறைவன் அவனது தூதர்(ஸல்) அவர்களுக்கு அளித்திருந்தான்.

மற்றொரு சந்தர்ப்பத்தில், அண்ணல் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள் **“தக்கதான காரணமில்லாமல் ஒரு பறவையை ஒருவர் கொன்றால் தீர்ப்பு நாளில் எல்லாம் வல்ல அல்லாஹ்விடத்தில் அப்பறவை புகார் அளித்திடும்.” “என் இறைவா! எந்தகாரணமுமின்றி ஒருவர் என்னை துன்புறுத்தினார், என்னை தாக்கிக்கொண்டார், என்னை கொலைசெய்தார். எனடனிடம் சற்றும் அவர் இரக்கம் காட்டவில்லை. இத்தகைய சூழ்நிலையில் அல்லாஹ்வின் தண்டனை என்னவாகயிருக்கும் என்பதைக் குறித்து ஒன்று யோசித்துப் பாருங்கள்?**

அவநம்பிக்கையாளர்களிடம் கூட, முற்றிலும் சிறந்த முறையில் பரிமாறிக்கொள்வதற்கு இஸ்லாம் கற்பிக்கின்றது. அது வாயிலாக முஸ்லீம்களின் இரக்கமும், மற்றும் எல்லாம் வல்ல அல்லாஹ்வின மகத்துவமும் வெளிப்பட்டுக்கொள்கின்றது.

## REACT / எதிர்செயல் ஆற்று (வினை)

இஸ்லாமின் சகோதர – சகோதரிகளே! கருணை என்பது இஸ்லாமின் சொல் அட்டவணையில் கூட இல்லை என்ற எண்ணம் நாம் வாழ்ந்திருக்கும் இக்காலகட்டத்தில் உருவாகியுள்ளது. நாம், முஸ்லீம் சமுதாயம் என்ற நிலையில் நம் வாழக்கையில் ஒவ்வொரு படியிலும் அனைவர்களிடமும் இரக்கத்துடன் இருக்க வேண்டும் என்பது நம் கடமையாகும். அது உங்களின் எதிராளியிடமானால் கூட! ஏனெனில் இஸ்லாம் கற்பிப்பது இரக்கமாகும். அதற்கு பின் நீங்கள் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளுக்காக பிரார்த்தனை செய்யுங்கள். உங்களுக்கு அநீதி இழைப்பவர்களுக்காக பிரார்த்தனை

செய்யுங்கள். சிலவேளை அவர்களுக்கு மாற்றம் ஏற்பட்டுவிடலாம். அவர்கள் நேர்வழியை பெற்று விடலாம்.

பூமியில், இந்த வாழ்க்கை நேரத்தில் மானிட குலத்திற்கு தேவை, இஸ்லாமின் மிக சிறந்த தத்துவமாகும். இந்த போதனைகளுக்கு புத்துயிர் அளிக்க வேண்டியது நம் கடமையாகயிருக்கின்றது. மானிட இரட்சிப்பிற்காக அதை நாம் நிறைவேற்ற வேண்டும். அது வாயிலாக மானிடகுலம் மற்றும் திருநபி(ஸல்)வின் சமுதாயம் அது விரும்பும் சமாதானத்தை அடைந்து விடும். இன்ஷா அல்லாஹ். ஆமீன்.


**Translated by:**

*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**Issued by:**

**R. Jamaluddin Raother**
**Amir - Kerala South Zone, India**
**Jamaat Ul Sahih Al Islam**

**Email:** jamal.raother@gmail.com

**Phone:** 9447001832, 04752252663